**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**

**ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**

***(28. 04. 2021 முதல் 02 05. 2021 )***

***அறிக்கைஎண் 034/2021*** ***தேதி. 27.04..2021***

***மாநிலத்தின் கடந்தவாரவானிலை***

தமிழகத்தின் பெரும்பாலானபகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செஆகவும்,கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

.

***ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை***

| கடந்தவாரவானிலை (23..04 .2021 முதல் 26 04.2021) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு - 02..05.2021- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/04 | 24/04 | 25/04 | 26/04 | தேதி | நாள் - 1 28/04 | நாள் - 2 29/04 | நாள் - 3 30/04 | நாள் - 4 01/05 | நாள் - 5 02/05 |
| 0.3 | 1.5 | 0.0 | 1.3 | மழை (மி.மீ) | 4 | 2 | 1 | 0 | 1 |
| 36 | 35 | 36 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 35 | 35 | 35 |
| 25 | 25 | 25 | 25 | குறைந்த பட்ச வெப்நிலை (°செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| 6 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 81 | 76 | 73 | 73 | அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 85 | 85 |
| 57 | 52 | 54 | 46 | குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 45 | 45 | 45 | 45 | 45 |
| 13 | 11 | 6 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| 200 | 230 | 200 | 200 | காற்று வீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

***எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (28. 04.2021 முதல் 02 05 .2021 )***

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேக மூட்டத்துடன் காணப்படும். ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பொழிய வாய்ப்புள்ளது.. அதிகபட்ச வெப்பநிலை 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 45 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென்மேற்கு திசையில் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | மேற்கு மலைத்தொடர்ச்சி மாவட்டங்களில் ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பொழிய வாய்ப்புள்ளது. நீர்பாசனத்தை தள்ளிப்போடவும் மற்றும் கோடை உழவு செய்யவும்.<br>கோடை மழையனை நிலத்தடியில் சேமிக்கவும், பயிர் கழிவுகளை மறுசுழற்சி செய்யவும், அறுவடை செய்த மற்றும் தரிசு நிலங்களை சரிவிற்கு குறுக்காக மண்ணை புரட்டும் கலப்பை கொண்டு உழவு செய்யவும்.<br>வானம் மேகமூட்டத்துடன் மற்றும் இடி மின்னலுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து இறவை பயிர்களுக்கு அடியுரம் அளிப்பதை தவிர்க்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையில் சாறு உறுஞ்சும் பூச்சிகள் அடித்து செல்ல வாய்ப்புள்ளதால் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்க வேண்டாம். |
| **சோளம்** | விதைப்பு | இலேசானதூறல் மழையே எதிர்பார்க்கப்படுவதால், உழுத நிலங்களில் இறவை சோளம் விதைத்து தொடர்ந்து நீர் பாசனம் செய்யவும். |
| கம்பு | விதைப்பு **மற்றும் இளம் பருவம்** | ஞபய்யும் மழையினை பயன்படுத்தி இறவை கம்பு மற்றும் பாடுவாசி விதைப்பினை தொடரவும். விதைகளை 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு கடினப்படுத்தி (விதைகளை 16 மணி நேரம் ஊரவைத்து, 5 மணி நேரம் நிழலில் உலர்த்தவும்) விதைக்கவும்.<br>தொடர்ந்து மழை பொழிவதால் இறவை கம்பு பயிரில் அதிக களைகள் வர வாய்ப்புள்ளது. எனவே மழை இல்லாத தருணங்களில் களை எடுத்து, பயிர்களை களைத்து பயிர்களுக்கு இடையில் 15 செ.மீ இடைவெளி இருக்குமளவு பயிர்களின் எண்ணிக்கையை பராமரிக்கவும். |
| கரும்பு | வளர் பருவம். | மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிர் சாயாமல் தவிர்க்க தோகை உரிக்க வேண்டும்.<br>தொடர் மழையின் காரணமாக கரும்பு பயிரில் இரும்பு சத்து குறைபாடு தென்படுகிறது. எனவே இதை நிவர்த்தி செய்ய மழை இல்லாத தருணங்களில் 1 சதவீதம் இரும்பு சல்பேட் கரைசலை 1 சதவீதம் யூரியா கரைசலுடன் சேர்த்து 15 நாட்கள் இடைவெளியில் குறைபாடு நிவர்த்தி ஆகும் வரை தெளிக்கவும்.<br>கடந்தவார மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி பின் பருவ கரும்பு சாகுபடியை தொடர்ந்து மேற்கொள்ளலாம். மேலும் நடவுக்கு முன்பு கருணைகளை 0.1 சதவீதம் கார்பன்டசிம் கரைசலில் 15 நிமிடங்கள் ஊறவைத்து பின்பு நடவு செய்யவும். |
| காய்கறிகள் | வளர் பருவம். | சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் காய்கறிகளில் சிலந்தி தாக்குதல் வர வாய்ப்புள்ளது. ஆதலால் விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் ப்ராபார்கைட் 2.5 மில்லி அல்லது ஸ்பைரோமெஸ்பென் 0.5 மில்லி ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| வாழை | | கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.<br>பரவலரக வாழையில் குருத்து அழுகல் நோய் காணப்படுகிறது. இதற்கு 1 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் பீளீச்சிங் பவுடரை கலந்து மரத்தின் அருகே ஊற்றவேண்டும். இதை நோய் வருவதற்கு முன்பு செய்தால் நோய் வராமல் பாதுகாக்கலாம். |

| | | |
|---|---|---|
| தென்னை | | தென்னை மரத்தின் பாத்திகளை களைக் கொத்து கொண்டு கிளறி விடுவதன் மூலம் மழை நீரை சேகரிக்கலாம்.<br>இலேசான தூறலே எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் குறிப்பாக தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும். |
| மஞ்சள் | நடவு | நிலவும் வானிலையில் மஞ்சள் கிழங்கை நடவு செய்வதற்கு உழவு மேற்கொள்ளவும். ஒரு எக்டருக்கு 12.5 டன்கள் தொழு உரத்தை வயலில் இட்டு கடைசி உழவு மேற்கொள்ளவும். |
| கால்நடைகள் | | இடி மின்னல் எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாடடுக்கொட்டைகளில் மின்சாரத்தை துண்டிப்பதன் மூலம் தீ பிடிக்காமல் பாதுகாக்கலாம். மேலும ்மாடு, ஆடு மற்றும் கோழி தீவனங்களை நனையாமல் பாதுகாக்கவும்.<br>கோடை காலங்களில் பெறப்படும் மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும். எனவே கால் நடைகளை மழை நேரங்களில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம்.<br>ஒரு சில இடங்களில் ஆடுகளில் துள்ளுமாறி நோய் காணப்படுகிறது. இதற்கு ஆடுகளை வெய்யில் வந்த பிறகு மேய விடவும். மேலும் அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும். |

**குறுஞ்செய்தி**

- கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம்,**
**கோவை**